Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 04 விலை ரூபா 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆடி 02 (18 - 07 - 1991) வியாழக்கிழமை ஓசை: 150

## புலிகளின் கோரிக்கைக்கு மக்கள் பேராதரவு

(சோரண்டாவில்)

ஆனையிறவுப் போரிலீடுபட்டிருக்கும் போராளிகளுக்கு உதவுமாறு தமிழீழ விடுதலைப் புலிகள் வேண்டுகோள் விடுத்திருந்தனர். இந்த வேண்டுகோளை அடுத்து தமிழீழ மக்கள் மிகக் குறுகிய காலத்தில் உலர் உணவு வகைகளையும், சாக்குகளையும் சோரண்டாவில் செயலகத்தில் ஒப்படைத்துப் புலிகளின் கோரிக்கைக்குப் பேராதரவு வழங்கி வருகின்றார்கள்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கட்டைக்காடு - வெற்றிலைக்கேணியில்

# இராணுவத்திற்குப் பேரிழப்பு

# படை வாகனங்கள் பல நாசம்

(இயக்கச்சி)

கட்டைக்காடு - வெற்றிலைக்கேணிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்திற்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் பெரும் தரைப்போர் மூண்டுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. நேற்றுமட்டும் நிகழ்ந்த இம்மோதலில் பல இராணுவ வாகனங்கள் அழிக்கப்பட்டதாகவும், பல இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும், பெருமளவினரான இராணுவத்தினர் காயமடைந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இம்மோதலில் புலிகள் தரப்பிலும் பலர் வீரமரணமடைந்ததாகவும் தெரிய வருகின்றது.

புலிகளால் முற்றுகையிடப்பட்டுள்ள ஆனையிறவு முகாம் முற்றுகையை முறியடிக்க தரையிறக்கப்பட்ட விசேட படைப்பிரிவினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலேயே இம் மோதல்கள் இடம் பெற்று வருகின்றன.

கடந்த மூன்று தினங்களாக தரையிறங்கிய இராணுவத்தினர் ஆனையிறவு நோக்கி முன்னேறும் முயற்சியை மேற்கொண்டதைத் தொடர்ந்தே இம் மோதல் நடைபெறுகின்றது. இராணுவம் தரையிறங்கிய கடந்த மூன்று தினங்களிலும் ஆனையிறவு நோக்கி முன்னேற படையினர் முயற்சித்தமை தெரிந்ததே.

அதேவேளை நேற்றுக் காலை ஆரம்பமான மோதலின்போது ஒரு பவல் வாகனம் சேதமாக்கப்பட்டது. விடுதலைப் புலிகளின் ரொக்கட்தாக்குதலுக்குள்ளான அவ்வாகனம் தீப்பற்றிக் கொண்டது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 24 மணி நேரத்தில் 17 இராணுவம் பலி

(மணலாறு)

கடந்த இருபத்திநான்கு மணி நேரத்திற்குள் பதினேழு இராணுவத்தினர் உயிரிழந்திருப்பதாக கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் வெளியிட்டதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும் இது வரை விடுதலைப் புலிகளின் முற்றுகையை முறியடிக்கவோ அல்லது ஆனையிறவு முகாமிற்குள் காயப்பட்டிருக்கும் ஐம்பதைந்து இராணுவத்தினரை மீட்டெடுக்கவோ அரசபடைகளால் முடியவில்லை என சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை ஆதாரம் காட்டி நேற்றிரவு வெரித்தாஸ் வானொலிச் செய்தி தெரிவித்தது.

## ஆனையிறவைச் சூழ கடும் விமானக்குண்டு வீச்சு

(ஆனையிறவு)

ஆனையிறவு பகுதியைச் சூழ கடும் விமானத் தாக்குதல் நடைபெற்று வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. இவ் விமானத்தாக்குதல்கள் இரவுபகலாகத் தொடர்ந்து நடைபெற்றுவருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சிறிலங்கா விமானப்படையின் முழுவளவினதான வலிமையும் இங்கு பயன்படுத்தப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மணலாறு மோதலில் 20 இராணுவத்தினர் பலி

(மணலாறு)

மணலாறு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் முகாம் ஒன்றை இரண்டாவதுதடவையாக முற்றுகையிட முயன்ற சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் இருபதிற்கும் மேற்பட்ட சிறிலங்கா இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் பெரும் எண்ணிக்கையான இராணுவத்தினர் படுகாயமடைந்துமுள்ளனர். இராணுவத்தினரிடமிருந்து ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன. இச்சம்பவத்தில் புலிகள் தரப்பில் பன்னிரண்டு வீரவேங்கைகள் வீரமரணத்தைத் தழுவியுள்ளதா

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மேஜர் வீமன் உட்பட 12 போராளிகள் வீரமரணம்

மணலாறு மாவட்டத்தில் நேற்று முன்தினம் சிறிலங்கா இராணுவத்தை விரட்டியடித்த நேரடி மோதலில் வீரமரணமடைந்த போராளிகளின் விபரம் வருமாறு:

★ மேஜர் வீமன் (உ. சோலை விக்கினேஸ்வரன், சகாய வீதி அடம்பன், மன்னார்)

★ கப்டன் இளங்கோ (கனகராசா ஜெயந்தன், பாரதிவீதி, கம்பர்மலை, வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணம்)

(3 ஆம் பக்கம் பார்க்க)

## பதினொராம் திகதி மோதலில் 62 புலிகள் வீரமரணம்

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு முகாம் பகுதியில் கடந்த பதினொராம் திகதி ஏற்பட்ட கடும் மோதலில் விடுதலை புலிகள் தரப்பில் ஆண், பெண் போராளிகள் உட்பட அறுபத்தி இரண்டு போராளிகள் வீரமரணமடைந்தனர்.

வீரமரணமடைந்த போராளிகளின் விபரம் வருமாறு

★ அர்ச்சுன் (சந்திரசேகரம் சுரேஸ்குமார், சங்கத்தானை, சாவகச்சேரி.)

★ செல்வா (பொன்னன் நடராசா, வரணிவடக்கு, வரணி.)

★ ஜனகா (செந்தில்வேல் சாந்தி மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.

(3 ஆம் பக்கம் பார்க்க)

## இரு வெடி விபத்தில் மூன்று புலிகள் வீரமரணம்

(நமது நிருபர்)

வடமராட்சிப் பகுதியில் தற்செயலாக நடந்த வெடிவிபத்தொன்றில் சிக்கி விடுதலைப் புலிகள் இயக்கத்தைச்சேர்ந்த இருவரும், இயக்கத் தீவிர ஆதரவாளர் ஒருவரும் வீரமரணத்தைத் தழுவிக்கொண்டுள்ளனர். நேற்றுமுன்தினம் காலை பத்து முப்பது மணியளவில் இடம்பெற்ற இச்சம

(4 ஆம் பக்கம் பார்க்க)

## துணைப்படை வீரர் வீரமரணம்

வெற்றிலைக் கேணிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்துடன் நடைபெற்ற மோதலில் துணைப்படை வீரரான குட்டி (கணேசலிங்கம் சபேசன் மூத்த விநாயகர் வீதி நல்லூர்.) நேற்று முன்தினம் வீரமரணம் அடைந்தார்.

சிறிலங்கா இராணுவத்தின

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வீரமரணமடைந்தோருக்கு மக்கள் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

கட்டைக்காட்டுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலின் போது வீரமரணமடைந்த போராளிகளான குழந்தை (மட்டக்களப்பு), வரதன் (அம்பாறை), லக்ஸ்மன் (அச்சுவேலி) சிவபாலன் (சங்கானை), றோகன் (மூதூர்) ஆகியோரின் புகழுடல்கள் நேற்றைய தினம் சுன்னாகம் மயிலணி சைவ மகாவித்தியால

(4 ஆம் பக்கம் பார்க்க)

## முகமாலைப் பகுதியில் விமானக் குண்டு வீச்சு

முகமாலைப் பகுதியில் சிறிலங்கா விமானப்படை குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தியுள்ளது. இரண்டு குண்டுகள் வீழ்ந்து வெடித்தனவாயினும் உயிர்ச் சேதம் எதுவும் ஏற்படவில்லை. முகமாலையில் உள்ள கிறிஸ்தவ தேவாலயமொன்றில் பெரு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வலந்தலை இராணுவம் மீனவர் மீது சூடு

(இத்தன்கேணி)

பொன்னாலையில் நான்காவது பாலத்தருகில் சிறு படகொன்றில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர் மீது நேற்றுக்காலை 7 மணியளவில் வலந்தலை முகாமிலிருந்து இரா

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இடம்பெயர்ந்தோருக்கு ஒருவாரஉணவு விநியோகம்

(யாழ்ப்பாணம்)

கட்டைக்காடு இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்து அதன் சுற்றுப் புறங்களில் இருந்து குடிபெயர்ந்துள்ள மக்களுக்கான ஒருவார உணவை இலவசமாக வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்

(4 ஆம் பக்கம் பார்க்க)

யாழ். தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

**பொது நிர்வாக சபைக் கூட்டம்**

இடம்: நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயம்
காலம்: 19-7-91 வெள்ளி பி. ப. 3-00 மணி.

போர்க்கால நடவடிக்கைகள் பற்றி ஆராயப்படவிருப்பதனால் சகல கோட்ட நிர்வாக உறுப்பினர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு அழைக்கின்றோம்.

(R-1556) பொதுச் செயலாளர்

## அவசர அறிவித்தல்


எங்கள் நிறுவனத்தில் கல்விகற்ற, கற்றுக் கொண்டிருக்கின்ற சகலதாதியர்களும் தாதிய மாணவிகளும் 19-7 91 காலை 9-00 மணிக்கு பாடசாலையில் சீருடையுடன் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

குறிப்பு: இது ஒரு அவசர அழைப்பாகையினால் சகலரும் தவறாது சமுகமளிக்கவும்.

அதிபர்
சாயி மருத்துவக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(B-2816)


## கண்ணீர் அஞ்சலி



ஆனையிறவு முகாம் மோதலில் வீரமரணமடைந்த
வீரவேங்கை நியூட்டனுக்கும்
(கந்தையா தேவராசா) ஏனைய வீரவேங்கைகளுக்கும்
எமது கண்ணீர் அஞ்சலிகள்
இவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

காரைநகர் வாழ்
(R-1552) திக்கரை இளைஞர்கள்

# 5ஆம் நாள் நினைவஞ்சலி



**யாதவன்**
(கந்தையா கமலக்கண்ணன்)

தாயின் மடியில் 26 - 08 - 1969
தாயக மண்ணில் 14 - 07 - 1991

(கட்டைக்காட்டில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரமரணமடைந்தார்)

தியாகியே!
தியுடன் - உன்
தியாகம் தேயாது!
கட்டைக் காட்டில்
களப்பலியானவனே!
மண்ணில் முளைக்கும்
மரங்கள் கூட
உன தியாகம்
சொல்லும்!

என்றும் உன்னை மறவா
- குடும்பத்தினர்

15/3 சந்தனமாதா கோவில் வீதி,
பாண்டியன் தாழ்வு,
யாழ்ப்பாணம்.

(R/ 1554)

வர்த்தகவிளம்பரம்

திரவ சவர்க்காரம்

சகலதேவைக்குமான அழுக்கு போக்கி மிக்கவைத் திரவ சவர்க்காரம் (LIQUID SOAP) 1/2 போத்தல் ரூபா. 45/- மட்டுமே. வேலையுடன் கூடிய வெற்றுப்போத்தல் ஒவ்வொன்றுக்கும் ரூபா. 2/- விற்பனை விலையில் தள்ளுபடி. (B-2807)

# நினைவு கூருகின்றோம்...

**1991-07-18**

1984 ஆம் ஆண்டு இதேதினத்தில் யாழ்ப்பாணம் பழைய பூங்காச்சந்தியில் சிறிலங்காப் படையினரின் திடீர் சோதனையின் போது சயனைட் உட்கொண்டு வீரமரணமெய்திய
வாசன் (ஐயம்பிள்ளை மணிவாசகம் - நெடுந்தீவு)
அலெக்ஸ்/சின்னக்கண்ணாடி (வேதரத்தினம் மொறிஸ்றெஜினோல்ட் - சென்யாக்கோமிடம்)

1986 ஆம் ஆண்டு நெடுங்கேணியில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 5 தமிழர்கள்

1987 ஆம் ஆண்டு கொல்லங்கலட்டியில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய
சின்னண்ணா (சின்னத்துரை காசிகேசன் - கொல்லங்கலட்டி)

குஞ்சுபவான்
மாவிட்டபுரத்தில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ் இளைஞர்

1988 ஆம் ஆண்டு இராசேந்திரங்குளத்தில் வீரமரணமெய்திய
வைத்தி (பாலசிங்கம் இராஜேந்திரம் - வவுனியா)

பரந்தனில் இந்தியப் படையினரால் கொலை செய்யப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

கம்பர் மலையில் இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல்போன தமிழ் இளைஞன்.

1989 ஆம் ஆண்டு பழுகாமத்தில் இந்தியப்படை மற்றும் தேசவிரோதிகளின் சுற்றி வளைப்பின் போது வீரமரணமெய்திய
ஆதவன் (சொர்ணலிங்கம் சசிதரன் - கொக்கட்டிச்சோலை)

ஏழாலையில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய
லெப். அனுஷன் (சிவராசா சபேஷ்குமார் - ஏழாலை)

திருகோணமலையில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 10 தமிழர்கள்.

1990 ஆம் ஆண்டு வீரமரணமெய்திய
நந்தன் (வீரசத்தி இராசேந்திரம் - நெடுங்கேணி)
ஜவஹீர் (சின்கொழுந்து கிரிஷாந்தன் - சமணங்குளம், ஒட்டிசுட்டான்)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

- விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B-2820)

# வீரவணக்கம்

ஆனையிறவு மான மறப் போரில்
மற்றோர் காவியம் எழுதப்படுகிறது.
இந்த வெற்றிக்கு வித்தாக விழ்ந்திட்ட
வீரவேங்கைகளுக்கு
எமது வீரவணக்கங்கள்



எங்கள் மண்ணின்
வீர புருஷர்களே!
நீங்கள் இறைத்த இரத்தம்
இத்தேசத்தின்
சுதந்திரப் பயிருக்கு
உரமாகும்!
உங்கள் பெயர்களை
என்றும் உலகம்
உச்சரிக்கும்!

"புலிகளின் தாகம் தமிழீழ தாயகம்"

வடபிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்கம்

(R-1553)

### ※ சிந்தனைக்கு ※

உரிமைகளின் உண்மையான மூலம், கடமையே.

— மகாத்மா காந்தி

ஈழநாதம்

81, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம், 18.07.1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05

# பயன் பொருத்தமான உதவி விரும்பத்தக்கது

ஆனையிறவில் ஆரம்பமாகிய போர் ஒருவாரத்தைத் தாண்டி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. போராளிகள் சிறிலங்காவின் முப்படைகளுக்கு தாக்குதலுக்கு எதிராகச் சளைக்காது போராடுகின்றார்கள்.

களத்தில் நிற்கும் போராளிகளுக்கு மக்களும் தம்மாலான உதவிகளை வழங்கி வருகின்றார்கள் பால், வயது வேறுபாடு இன்றி உதவி வழங்குவதில் மக்கள் முன்நிற்கின்றார்கள் சிலர் தமது சக்தியையும் மீறி உதவி செய்து வருகின்றார்கள்.

அதேபோன்று போராளிகளும் தமது உடன் தேவைகளை மக்களிடம் வெளிப்படுத்துகின்றார்கள். மக்கள் அதை நிவர்த்தி செய்வதில் முனைப்பாகவுள்ளனர். தமிழ் இனமே ஒரு குடும்பம் போன்று ஒருவருக்கொருவர் உதவுகிறார்கள். மக்கள் யுத்தத்தை நம்பிக்கையுடன் எதிர்கொள்கின்றார்கள்.

ஆனால், சில தவிர்க்கக் கூடிய கவலையளிக்கும் விடயங்களும் நடைபெறத்தான் செய்கின்றன. போர்க்களத்தில் போராளிகள் வீரமரணமடைவதும், காயமடைவதும் கவலையளிக்கும் விடயமாகிலும் தவிர்க்கமுடியாதவையாகின்றன. ஆனால் ஒரு போராளி உணவின்றி வாடுவது தவிர்க்க முடியாததல்ல.

இரு தினங்களுக்கு முன் கப்டைக் காட்டுப் பகுதியில் களத்தில் நின்ற ஒரு போராளி முதல்நாள் காலை உண்ட உணவுடன் அடுத்த நாள் இரவு வரையும் போரிட்டார். அவருக்கு உணவு கிடைக்கப்பெறவில்லை. அவர் உணவை உடன்பெற வசதி இருக்கவில்லை. இதற்குக் காரணம் இயக்கம் செய்த ஏற்பாடுகளில் இருந்த தவறல்ல உணவு விநியோகத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவர் காயமடைந்து வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டதினாலும் தொடர்ந்து நடந்த விமானக் குண்டு வீச்சால் ஏனையோர் அப்பகுதிக்குச்செல்ல முடியாத நிலை உருவாகியமையினாலுமே இந்நிலை ஏற்பட்டது.

இந்நிலையில் களத்தில் நின்ற போராளியின் நிலை மிகவும் கடினமாக இருப்பினும் அவர் தனது கடமையை நிறைவேற்றச் சளைக்காது போரிட்டார். மக்களும் தமது ஒத்துழைப்பை வழங்குகின்றனர். இயக்கமும் தனது கடமையைச் செவ்வனே செய்கின்றது ஆனால் துரதிஷ்டவசமாக முப்பத்தியாறு மணித்தியாலங்கள் போராளி உணவின்றிப் போராடவேண்டி இருக்கின்றது. இது ஒரு விரும்பத்தகாத விடயமாகும். ஆனால் இதனை நாம் நிவர்த்தி செய்ய வழிவகைகள் இல்லாமல் இல்லை.

மக்கள் போராட்டத்தில் உள்ள உணர்ச்சிக் கொந்தளிப்பில் தமது சக்திக்கு ஏற்ப உதவும்போது அவற்றைப் போராளிகள் முழுமையாகப் பயன்படுத்தக் கூடியதானதாக இருத்தலும் வேண்டும். இயக்கம் போராளிகளுக்குரிய உணவு வகைகளை விநியோகிக்கின்றது சில கடினமான, சிக்கலான வேளைகளிலேயே இவ்விநியோகம் தடைப்படுகின்றது. இந்நிலையிலேயே போராளிக்கு உணவு நெருக்கடி ஏற்படுகின்றது. ஆகையால் இந்நிலை ஏற்படும் போது பயன்படுத்தக்கூடிய உணவுப் பண்டங்களை மக்கள் வழங்குவதே பொருத்தப்பாடானதாகும்.

சோறோ, ஏனைய இடியப்பம், பிட்டு போன்ற உணவுப் பண்டங்களோ சேமித்து வைத்தோ, அன்றி களத்திற்கு எடுத்துச் சென்றோ பயன்படுத்தக் கூடியவை அல்ல. அவை காலம் தாழ்த்தினால் பழுதடைந்துவிடக் கூடியவையாகும். ஆனால் சிற்றுண்டிப் பதார்த்தங்கள் கொண்டு செல்வதற்கும், பழுதடையாமல் இருப்பதற்கும், நெருக்கடியின்போது உண்பதற்கும் இலகுவானவையாகும், இதனால் போராளிகளின் பயன்பாட்டிற்கு இவை மிகவும் விரும்பத்தக்கவையாகும்.

உதவும் மக்களிடம் இது வேண்டாம், அதுதான் வேண்டும் என விடுக்கப்படும் கோரிக்கையோ அன்றி வற்புறுத்தலோ அல்ல இது. அவர்களின் உதவியும், செலவிடும் முழுமையான பயன்பாடு உடையதாக இருக்கவேண்டுமானால் இப்பொருள்களின் உதவி விரும்பத்தக்கது. இதனால் மக்களுக்கு சற்று வேலை அதிகரிக்கலாம். ஆனால், அவர்களின் உதவி பயன் பொருத்தமானதாக இருக்கும்.

## புலிகளுக்கு இணையாக

# தமிழக காவல் துறையும் நவீன மயப்படுத்தப்படும்

### - செல்வி ஜெயலலிதா

(டில்லி)

தமிழீழ விடுதலைப் புலிகள் வைத்திருக்கும் ஆயுதங்களுக்கு இணையாக தமிழக காவல் துறையினருக்கும் ஆயுதங்கள் வழங்க மத்திய அரசாங்கம் நிதி வழங்க வேண்டும் என தமிழக முதலமைச்சர் செல்வி. ஜெயலலிதா கேட்டுள்ளார்.

நேற்று முன்தினம் புதுடில்லியில் பிரதமர் பி. வி. நரசிம்மராவைச் சந்தித்துப் பேசிய ஜெயலலிதா விடுதலைப் புலிகளுக்கு இணையாக சகல துறைகளிலும் தமிழக காவல் துறையையும் நவீனமயப்படுத்த கூடுதலான நிதியுதவி தேவையென்றும், அதனை மத்திய அரசாங்கம் தந்து உதவ வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

ஆயுதங்கள், பயிற்சிகள், தகவல் தொடர்புகள், போக்குவரத்து போன்ற துறைகளால் விடுதலைப் புலிகளுக்கு இணையாக இருக்க திட்டம் தீட்டியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் மது விலக்கினை நடைமுறைப் படுத்தியுள்ளதால் அரசாங்கத்திற்கு கிடைக்கும் வருமானமும் நிறுத்தப்பட்டுள்ளதால் அதனை நிவர்த்தி செய்யவும் மத்திய அரசு நிதி உதவி செய்ய வேண்டும் என்றும் பிரதமரை ஜெயலலிதா கேட்டுக்கொண்டார்

## சோவியத் நிராகரிப்பு

(லண்டன்)

மேற்கத்தைய தலைவர்கள் இன்று சோவியத் தலைவர் முன்வைக்கவிருக்கும் பொருளாதார சீர்திருத்தங்கள் பற்றிய ஆலோசனைகள் மீது தெரிவிக்கப்படும் கண்டனங்களைச் சோவியத் அதிகாரிகள் நிராகரித்துள்ளனர். விமர்சகர்கள் அந்தச் சீர்திருத்தங்களைப் பார்க்கவில்லை அல்லது சோவியத் யூனியனின் உண்மை நிலையைப் புரிந்து கொள்ளவில்லை என்று அந்த அதிகாரிகள் கூறியுள்ளனர்.

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

★ ஜீவா (தவபாலசிங்கம் சசிலதா, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி)
★ மங்கை (செல்வராசா கனோன்மணி கச்சேரிநல்லூர்றோட், யாழ்.)
★ கஸ்தூரி (கணேசன் வசந்தி ஊரெழுகிழக்கு, சுன்னாகம்)
★ குணேஸ் (சின்னத்தம்பி சங்கர் கெருடாவில் வடக்கு, தொண்டமானாறு)
★ ரகு (யோசப் பெஞ்சமின் 6 ஆம் வட்டாரம், பேசாலை)
★ உமி (கனகரட்ணம் சதீஸ்வரன் 197, 1 ஆம் கொலனி, கந்தளாய்)
★ ரட்ணா (கந்தையா விக்னேஸ்வரன் வரணி இயற்றாலை, வரணி)
★ அமுதினி (சிவசுப்ரமணியம சி. ...ந்தி உரும்பராய் கிழக்கு, உரும்பராய்)
★ மொசாட் (ஆறுமுகம் ஜெயமோகன் 4ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு)
★ தமயந்தி (தில்லையம்பலம் மகேஸ்வரி பொன்னகர். முள்ளியவளை)
★ றெஜினோல்ட் (சந்தணமரி கணேஸ் பெரிய உப்பளம், வடடுநகர்)
★ வாசு (தேசிங்கம் தமிழ்ச்செல்வன் பழைய விநாயகர் கோயிலடி, உடுப்பிட்டி)
★ ஜெயச்சா (செல்லத்துரை அமிர்தலிங்கம் கோப்பாய் வடக்கு, கோப்பாய்)
★ யசோ (சிவஞானம் சஜீதா செப்டியவூர், தொண்டமனாறு)
★ தினேஸ் (செல்லத்துரை ஸ்ரீதரன் மெயின்றோட், மொறக்கொட்டாஞ்சேனை)
★ கருணா கந்தசாமி சந்திரகுமார், மாதிரிக்கிராமம், குப்புறுப்பிட்டி)
★ குலேந்திரன் (நவரட்ணம் நாகேஸ்வரன் புளியங்குளம் ஓமந்தை)
★ சேகரன் (கணபதிப்பிள்ளை இராசநாயகம் காயமகேணி, மாங்கேணி)
★ யோகன் (தவபாலசிங்கம் மகேஸ்வரன் அல்வாய், வடக்கு, அல்வாய்)
★ ஈசன் (பாலசுந்தரம் ரவிச்சந்திரன் அம்பலத்தாடி வீதி, வந்தாறுமூலை)
★ நிமலன் (தங்கவேலு குமாரன் 6 ஆம் வாய்க்கால், பன்குளம்)
★ வாணதி (சண்முகநாதபிள்ளை பத்மசோதி 174, கோவில் வீதி, நல்லூர்)
★ கிருஷ்ணா (பொன்னம்பலம் கௌரிமலர் மாந்தை, திருக்கேதீஸ்வரம்)
★ பைரவி (கணேசமூர்த்தி திருமகள் அளவெட்டி வடக்கு, அளவெட்டி)
★ சந்திரா (சிங்காரசன் கேரிபுஸ்பவதா இரணைப்பாலை, புதுக்குடியிருப்பு)
★ கோமதி (கனகலிங்கம் சுடரொளி அரசடி தெற்கு மட்டுக்கோட்டை)
★ ராணி (ஐயாசாமி, கமலேஸ்வரி 5 ஆம் கட்டை, அலம்பில் முல்லை)
★ குட்டியா (சிவலிங்கம் சாந்தநாயகி சிவன்கோவிலடி, மட்டுவில் தெற்கு)
★ ஆரபி (முருகேசு செல்வி றிமோபேக்கரி, துணுக்காய்)
★ வனஜா (சங்கர் ஜானகி மன்னம்பிட்டி, மட்டக்களப்பு)
★ லீமா (இராஜேந்திரம் கௌரி இந்திரம்மன் கோவிலடி. தன்னாலை)
★ கலைவாணி (பாலசுந்தரம் நிர்மலா கச்சாய் வீதி, சாவகச்சேரி)
★ துளசி (ஐயாத்தம்பி ரஞ்சிதமலர் குடமியன், வரணி)
★ நிரோ (கல்விபுரம் உதயகுமாரி வினைகளாலேன், மன்னாகம்)
★ மரீஸ்ரனா (மரியாம்பிள்ளை கொலின் சலிறா, வெற்றிலைக்கேணி)
★ அகல்யா, (கைலாசபிள்ளை சந்திரகலா, கோசபுரம், மல்லாவி)
★ ஜீவன், (நடராசா சிவபாலன், அம்மன் கோயிலடி, கோண்டாவில்)
★ பாலு. அருணம்பலம் குமாரதுரை, கேன்காமம், கிளிவெட்டி, மூதூர்)
★ சுரேன். (தெய்வேந்திரம் சுந்தரமூர்த்தி. 534, யுனிற் 2, கந்தளாய்)
★ கலாதரன், மாணிக்கம் தர்மராஜா, பட்டித்திடல் மூதூர் திருமலை
★ யசோதரன் (வேலுப்பிள்ளை செல்வராஜா, மடுறோட் கணேசபுரம், வவுனியா)
★ கந்தமணி, (தம்பிப்பிள்ளை சிவகுமார், காயக்கேணி, மாங்கேணி)
★ மட்டேன், (அழகையா சாந்தகுணம், குருக்கள் மடம், கழுவந்தன்கேணி)
★ ரோமியோ, (சபாரட்ணம் சுரேஸ்குமார், அடம்பன், மன்னர்)
★ மைக்கல் ஆழ்வார் விநாயகமூர்த்தி, நெல்லியடி, கரவெட்டி)
★ நீலன், இராமகிருஷ்ணன் இராஜ்குமார், 5 ஆம் வட்டாரம் திரியாய், திருமலை)
★ அக்மேல், (கணபதிப்பிள்ளை சுவேந்திரன், தம்பிட்டி, மருதத்துறை)
★ யோகன், (விசுவநாதன் சிவபாலன், துணுக்காய் றோட், மாங்குளம்)
★ அர்ஜுன், (பக்திநாகர் தர்சன் 23, கண்டி வீதி, சுண்டுக்குளி)
★ குருபவன், சாமிநாதன் சாந்தகுமார், 6 ஆம் யுனிற் இராமநாதபுரம், கிளிநொச்சி)
★ ஜெகன், (சவரி மோகனதஸ், முனைவாய், மயிலிட்டி)
★ சிங்கன், (சின்னையா நாகேஷ்வர விழிவரைக்குளம்
★ சசி, சவுந்தராஜன் சுரேஷ்குமார், கோபாலபுரம், நிலவெளி)
★ கரிசன், சதாசிவம் தர்மலிங்கம், சுதுமலை, மானிப்பாய்)
★ கிருபா, (நீலப்பிள்ளை கதிர்காமநாதன், நாவற்காடு, வரணி)
★ இதயன், (சுப்பிரமணியம் சுந்தர், வெருகல், மூதூர்)
★ சுந்தரமூர்த்தி, (சிவகுரு கிருஷ்ணபவான், மாணிக்கதஜயாகரராஜா வீதி, சுன்னாகம்)
★ லக்ஷ்மன், (தவானந்தவேல் ஜெகதீஸ்வரன், தெணியம்பை, வல்வெட்டித்துறை)
★ சரத்பாபு, (நவரத்ணம் கோபிநாத், கல்லூரி ஒழுங்கை, கொக்குவில்,

மேஜர் விமல்....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

★ கப்டன் பிரான்சிஸ்கோ (பேரின்பராசா, ஜீவானந்தராசா கேன்காமம், கிளிவெட்டி)
★ லெப். நிசேன் (ஜெயபாலன் அன்னராசா 10 ஆம் வட்டாரம், புதுக் குடியிருப்பு முல்லைத்தீவு)
★ 2 ஆம் லெப். கௌரிதரன் (யோகராசா. மகேந்திரன், கோபாலபுரம், நிலாவெளி, திருகோணமலை)
★ 2 ஆம் லெப். யோகராசா (கந்தையா: நாகேந்திரம் பஞ்சாமம், 2ஆம் குறிச்சி, மட்டக்களப்பு)
★ தியாகலிங்கம் (நாகலிங்கம். ஜெயலிங்கம், மூளாய், சுழிபுரம், யாழ்ப்பாணம்)
★ கட்டப்பொம்மன் (மகேஸ்வரம்பிள்ளை. ராஜன், சாவைத்துறை, குருநகர் நெடுந்தீவு, யாழ்ப்பாணம்)
★ மூர்த்தி, (தபபிரகாச அனிதராசா, வராத்துப்பளை, பருத்தித்துறை, யாழ்ப்பாணம்)
★ கனகசபாபதி (பாண்டியன் நாகேந்திரம், கள்ளப்பாடு முல்லைத்தீவு)
★ ரமராக் (பேரின்பம். கணேசமூர்த்தி, காந்திபுரம், வலுகாமம், மட்டக்களப்பு)
★ சூரன் (சிவலிங்கம் குமாரிரான் கிருஷ்ணன் கோவிலடி, மட்டகளப்பு)

# யாழ். பாடசாலைகள் வெள்ளி முதல் இயங்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கல்விக் கோட்டத்தில் உள்ள சகல பாடசாலைகளும் நாளை 19-07-91 வெள்ளிக்கிழமை தொடக்கம் வழமை போல நடைபெறவுள்ளது. எனவே அதிபர் ஒழுங்குத் தீர்மானப்படி எல்லா அதிபர்களையும் ஏற்ற நடவடிக்கைகளை எடுக்குமாறு உதவிக் கல்விப் பணிப்பாளர் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்றைய தினம் யாழ். கல்வித் திணைக்களத்தில், கல்வி அதிகாரிகள் அதிபர்கள், ஆசிரிய கலாசாலை அதிபர்களுக்கான கூட்டம் நடைபெற்றது. இக் கூட்டத்தில் ஆசிரிய கலாசாலை உள்ளிட்ட கல்வி நிலையங்கள் யாவும் தொடர்ந்து கல்விப் பணி புரிய வேண்டுமென ஒரு மனதாக தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பாடசாலைச் செயற்பாடுகளும் ஆசிரியர், மாணவர் தொழிற்பாடுகளும் சாதாரண நாட்களாகக் கருதி மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் எனினும் இடவசதி, இடம் பெயர்ந்த மாணவர் நலன் ஆகியவை கருதி ஆறு மணித்தியால வேலை நேரத்தைக் கடைப்பிடிப்பதில் அதிபர்கள் கோட்டக்கல்வி அலுவலருடன் கலந்துரையாடி நெகிழ்ச்சித் தன்மையைப் பயன்படுத்தலாமென்றும் மேலும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# பொதுமக்கள் மத்தியிலிருந்து கடத்தப்பட்ட இளைஞர் பற்றித் தகவலில்லை

(வவுனியா)

தமிழ் இளைஞர் ஒருவரை பொதுமக்கள் மத்தியில் திடீரென்று கடத்திச் சென்ற சிறிலங்கா இராணுவத்தினர், கடத்தப்பட்டவர் பற்றி தமக்கு எதுவும் தெரியாது என்று தெரிவித்துள்ளனர்.

கடந்த 6ஆம் திகதி வவுனியா நகரப்பகுதி நோக்கிச் சென்றவர் அன்று மாலை திரும்பி வந்து கொண்டிருந்த வேளை, தாண்டிக்குளம் பகுதியில் வைத்து இராணுவ வாகனத்தில் வந்த படையினரால் கடத்தப்பட்டார்.

சின்னத் தம்பனையைச் சேர்ந்த குமாரவேல் பரமேஸ் (23) என்பவரே கடத்தப்பட்ட இளைஞராவார். இவரது கடத்தல் பற்றி உறவினர்கள் இராணுவ அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டபோது, அவரைப் பற்றி தமக்கெதுவும் தெரியாது என்று கூறப்பட்டதாம். (தி)

# ராஜீவ் உடையை ஒப்படைக்க நீதிமன்றம் உத்தரவு

(டில்லி)

சிறிபெரம்புதூரில் ராஜீவ் காந்தி இறந்தபோது அணிந்திருந்த உடையினை அவரது மனைவி சோனியா காந்தியிடம் ஒப்படைக்குமாறு ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக விசாரணை நடத்தி வரும் நீதிமன்ற நீதிபதி எஸ். எம். சித்தி நேற்று உத்தரவிட்டுள்ளார்.

நீதிமன்றத்தின் விசாரணைக்கு தேவைப்படும் போது இவற்றைத் திருப்பி ஒப்படைக்க வேண்டுமென்றும் சோனியா காந்தி கேட்கப்பட்டுள்ளார்.

சென்ற மாதம் சோனியா காந்தி ராஜீவ் காந்தி அணிந்திருந்த மாதணிகளைப் பெற்றுக் கொண்டது குறிப்பிடத்தக்கது.

# ஆந்திராவில் கண்ணிவெடி 9 பொலிஸார் பலி

(ஹைதராபாத்)

ஆந்திரப்பிரதேசத்தில் இடம் பெற்ற கண்ணிவெடிச் சம்பவத்தில் ஒன்பது பொலிஸார் உயிர் இழந்துள்ளனர் என்று ஆந்திர பிரதேச அரசு அறிவித்துள்ளது.

23 பொலிஸாரை ஏற்றிச் சென்றுகொண்டிருந்த வானின் மீது நக்சலைட்டுக்களால் வைக்கப்பட்ட கண்ணிவெடி வெடித்து 9 பேர் கொல்லப்பட்டனர் என்றும் 14 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் ஆந்திர அரசு அறிவித்துள்ளது.

---

புலிகளின் கோரிக்கைக்கு

மூவாயிரத்திற்கும் மேற்பட்ட சாக்குகள் நேற்று மாலைக்கிடையில் கோண்டாவில் செயலகத்திற்கு வந்து சேர்ந்தது குறிப்பிடத்தக்கது

# பரீட்சை நிலையம் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் இம்மாதம் இருபதாம், இருபத்தியோராம் திகதியில் நடைபெறவிருந்த முறைசாராக் கல்விப் பிரிவின் ஆண்டிறுதி பரீட்சைக்கான பரீட்சை நிலையம் சாவகச்சேரி மகளிர் கல்லூரிக்கு இடமாற்றம் செய்யப் பட்டுள்ளதாக முறைசாராக் கல்வி அதிகாரி தெரிவித்துள்ளார்.

பரீட்சார்த்திகள் தமது அனுமதி அட்டைகளை உரிய அதிபர்களிடம் பெற்றுக் கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (மு)

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ் வட்ட அமைக்குட்பட்ட பொது ஸ்தாபன உறுப்பினர்கள் கலந்துரையாடல் இன்று காலை 9.30 மணியளவில் மணிக்கூட்டுவீதி யாழ் சன்மார்க்க வித்தியாசாலையில் இடம் பெறும் அனைவரும் கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

---

ஆனையிறவைச்

படுவதாகவும் செய்திகள் குறிப்பிடுகின்றன.

அதேவேளை தென்மராட்சிப் பகுதியில் செல்லும் வாகனங்கள் மீது சிறிலங்கா விமானப்படை விமானங்கள் தாக்குதலை நடத்தி வருகின்றன. இதனைத் தொடர்ந்து நேற்று எழுதுமட்டுவாளில் வைத்து விடுதலைப்புலிகள் விமான எதிர்ப்புப் பீரங்கிகள் கொண்டு விமானங்கள் மீது தாக்குதலை நடத்தினர்.

மேலும் புதுக்காட்டுச்சந்தியிலும் சிறிலங்கா விமானப் படை விமானம் ஒன்று நான்கு குண்டுகளை வீசியது.

---

துணைப்படை

டனான மோதல்கள் பலவற்றில் களத்தில் முன்னின்று போராடிய குட்டிக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

வீரமரண

பத்தில் அமைக்கப்பட்ட விசேடமேடையில் பொதுமக்களின் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தன.

பெருந்தொகையான மாணவர்களும், பொதுமக்களும் வீரமரணமடைந்த போராளிகளுக்கு தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்,

இதனைத்தொடர்ந்து இடம் பெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பிரமுகர்களான தேவர், செல்வம், சுதன் மாஸ்டர், ஈஷால் அப்பா ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினர்.

அஞ்சலிக் கூட்டத்தைத் தொடர்ந்த மாவீரர்களின் புகழுடல்கள் கோப்பாய் மாவீரர் மயானத்திற்கு ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டு தகனஞ் செய்யப்பட்டது.

---

இரு வெடி

பவத்தில் பேர்ராஜ் (அறிக்காந்தி வின்சன்ட் அமலதாஸ், கிறிஸ்நகர், பளாலி), தைரியம் (நடராசா ஆனந்தராசா, கொற்றாவத்தை, பொலிகண்டி) என்னும் இரு விடுதலைபுலிகளும், குயிலன் எனப்படும் பெ. விக்னேஸ்வரனை(?)ச் சேர்ந்த தீவிர ஆதரவாளர் ஒருவரும் வீரமரணத்தைத் தழுவிக்கொண்டனர்.

அதேவேளை மணலாறு மாவட்டத்தில் நேற்றுக்காலை இடம்பெற்ற வெடி விபத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த கோபு (வெற்றிவேல் வசந்தன், வெல்லோவி லடி வீதி, பண்ணைக்கட்டை, தருத்தித்துறை) வீரமரணத்தைத் தழுவிக்கொண்டார்.

இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

# சோவியத்திற்கு நிதி உதவி; மேற்குலகம் ஆதரவு

(லண்டன்)

ரஷ்யாவின் பொருளாதார வளர்ச்சிக்கும், ஜனநாயக சீர்திருத்தங்களுக்கும் தாம் உதவ முன்வருவதாக லண்டனில் நடைபெற்ற ஏழு கைத்தொழில் நாடுகளின் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டிருப்பதாக தெரிய வருகிறது. நேற்று முன்தினமிரவு லண்டனுக்கு வருகை தந்த சோவியத் அதிபர் கொர்பசேவ் ஏழுநாடுகளின் தலைவர்களையும் சந்தித்து பொருளாதார உதவிக்கான கோரிக்கையை முன்வைப்பார் எனத் தெரிகின்றது. எவ்வளவு பொருளாதார உதவி வழங்கப்படும் என்பதை ஜீ-ஏழு அமைப்பின் தலைவர்கள் இதுவரையில் வெளியிடவில்லை.

# காணித் தகராற்றினால் இரு பெண்கள் காயம்

(வண்ணார்பண்ணை)

பக்கத்து வீட்டுடன் ஏற்பட்ட காணிப் பிரச்சினையால் கையில் அகப்பட்ட போத்தலினால் எறிந்து இரண்டு பெண்களை ஒரு வர்த்தகர் படுகாயப் படுத்தி உள்ளார். இச்சம்பவம் நேற்று வண்ணார்பண்ணையில் நடைபெற்றது.

இச்சம்பவத்தில் காயப்பட்ட ப. நிலாவதி, ம. யோகரூபி ஆகிய இரு சகோதரிகளும் யாழ். வைத்திய சாலைக்கு கொண்டுவரப்பட்டனர் (மே) இரத்தம் ஒடிய நிலையில்

# தவறு

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு மோதலில் வீரமரணமடைந்த பெண்போராளிகளின் வரிசையில் சசிகலா (கலா சண்முகம், நிலாவெளி, திருக்கோணமலை) என்ற பெயர் தவறுதலாக இடம் பெற்று விட்டது என்பதை மனவருத்தத்துடன் அறியத் தருகின்றோம்.

---

முகமாலைப்

மனவு இடம் பெயர்ந்தவர்கள் தங்கியிருக்கின்றனர். இத் தேவாலயத்திற்குச் சமீபமாகவே குண்டு வீச்சுத் தாக்குதல் நடந்துள்ளது.

---

இராணுவத்திற்குப்

மேலும் மாலை நடைபெற்ற மோதலின்போது ஒரு பவல் வாகனமும், இரண்டு சலாடின் வாகனங்களும் புலிகளின் தாக்குதலுக்குள்ளாகி முழுமையாகச் சேமடைந்தன.

அதேவேளை தொடர்ச்சியாக நடைபெறும் மோதலின் டனின் கணக்கில் இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் பெருமளவானோர் காயமடைந்ததாகவும் தெரிய வருகின்றது புலிகள் தரப்பிலும் பலர் வீரமரணமடைந்ததாகவும் தெரிய வருகின்றது.

ஆனையிறவில் நடைபெறும் இம்மோதல்கள் பற்றி நேற்றுக் காலை கருத்து வெளியிட்ட சிறிலங்கா இராணுவ அதிகாரி இது ஒரு பெரும் மோதல் எனவும் இருதரப்பினருக்கும் பாரிய சேதங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

---

மணலாறு

கவும் தெரிய வருகிறது.

இச்சம்பவம் நேற்று முன் தினம் காலை ஒன்பது மணியளவில் நிகழ்ந்துள்ளது இப்பகுதியிலுள்ள புலிகளின் இம் முகாமை இதற்கு முன்னைய தினமும் இராணுவத்தினர் முற்றுகையிட முயன்றதும், புலிகளின் எதிர்த் தாக்குதலால் பலத்த இழப்புடன் பின்வாங்கிச் சென்றதும் தெரிந்ததே.

இதே முகாமை இரண்டாவது தடவையாக முற்றுகையிடும் நோக்கத்தோடு முந்நூறுக்கும் அதிகமான சிறிலங்காப் படையினர் முன்னேறி வந்த போது விடுதலைப்புலிகள் திடீர்த் தாக்குதலை மேற்கொண்டதாகவும் தெரிகிறது

இத்தாக்குதலானது காலை ஒன்பது மணியில் இருந்து நண்பகல் ஒரு மணிவரை தொடர்ந்த நீடித்ததாகவும் தெரிய வருகிறது. இராணுவத்தினருக்கு உதவியாக உலங்குவானூர்தியில் இருந்து 50 கலிபர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகவும், சண்டை நடந்த இடத்திற்கு பதினேழு தடவை இராணுவ முகாமில் இருந்து எறிகணைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகவும் மேலும் தெரியவருகிறது.

இந்நிலையிலும் தீவிரமாகப் போரிட்ட புலிகள் இப்பகுதியில் இருந்து அனைத்து இராணுவத்தினரையும் விரட்டி அடித்துவிட்டதாக அறிந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. இராணுவத்தினரிடமிருந்து 203 எறிகணைத்துப்பாக்கி (டொம்கான்) - 01, ஏ.கே.எல்.எம்.ஜி 01 என்பன புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேவேளை இராணுவம் பின்வாங்கிய பின்னர் பிற்பகல் 1.10 மணியளவிலும், மூன்று மணியளவிலும் இருதடவைகள் நாயாற்றுப் பகுதியில் சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான பயணிகள் விமானமொன்று பத்து எரிகுண்டுகளை வீசியுள்ளன. இதனால் இப்பகுதியிலுள்ள புன்னைகளும், சிறுபற்றைகளும் எரிந்த வண்ணமுள்ளதாக அறிந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மாலை நாலு மணியளவில் நாயாற்றுக் கடலில் தரித்து நின்ற யுத்தப்படகில் இருந்து இப்பகுதியை நோக்கி பீரங்கி எறிகணைத் தாக்குதல் மேற்கொள்ளப் பட்டதாகவும் தெரிய வருகிறது.

# சிவில் உடையில் சிறிலங்கா இராணுவம்

(ஆனையிறவு)

கட்டைக்காடு - வெற்றிலைக்கேணிப் பகுதியில் சண்டையில் ஈடுபட்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் சிவில் உடையுடன் சண்டையிட்டு வருவதாக போர்முனையில் இருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

---

இடம்பெயர்ந்

றன.

இப் பிரதேசத்தில் உள்ள மருதங்கேணிப் பகுதியில் இருந்து இதுவரை 1977குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளனர். இவர்களுக்கான பதிவுபடாத ஒரு வாரத்திற்கான உலர் உணவு விநியோகிப்பது பற்றியே அரசாங்க அதிபர் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார். (ச)

---

வலந்தலை

லங்கா இராணுவம் வேட்டுக்களைத்தீர்த்தது. எறிகணைத் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டது. சேத விபரம் தெரியவில்லை

தொடர்ந்தால் போல இருவடி நிலையிலிருந்து வீசப்பட்டு குடிமனையை நோக்கித் தாக்குதலை மேற்கொண்டது. தாக்குதலினால் மூளாயில் ஐயம்பிள்ளையின் வீடு சிறு சேதத்துக்குள்ளாகியது. ஐயம்பிள்ளை குடும்பத்தினர் பக்கத்து வீட்டில் பதுங்கு குழியில் இருந்ததால் காயம் எதுவும் இன்றி உயிர் பிழைத்தனர்

இப்பகுதி மக்கள் இரவு வேளைகளில் மூளாய் பிள்ளையார் கோவிலிலும், மூளாய் ஆஸ்பத்திரியிலும் தங்கி வருகின்றனர். (54, க)

---

# மரண அறிவித்தல்

## செல்வன் சிவனேசன் அஜித்குமார்

(கிளிநொச்சி - கோணாவில்)

இணுவில் மேற்கைச் சேர்ந்த செல்வன் சிவனேசன் அஜித்குமார் 16.07.91 அன்று காலமாகிவிட்டார். இவர் சிவனேசன் வசந்தி ஆகியோரின் அன்பு மகனும், காலம் சென்றவர்களான செல்லத்துரை, கனகம்மா, கார்த்திகேசு, செல்வரத்தினம் ஆகியோரின் பேரனும், கனகேஸ்வரன் பரமேஸ்வரி, யோகேஸ்வரன் கனகலக்சுமி, மோகனசுந்தரம், செல்வராணி ஆகியோரின் பெறாமகனும், ஜெயகாந்தன் (செயான்) யோகேஸ்வரி, ஆனந்தன், சீலன் ஆகியோரின் மருமகனுமாவார்.

அன்னாரின் தகனக்கிரியை 18-07-91 (இன்று) இணுவில் மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சிவனேசன் குடும்பத்தினர்.

(R-1557)

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 81 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.